http://www.tamilnaduboard.com

No. of Printed Pages : 7

**4451**

பதிவு எண் | | | | | | |

# பகுதி I – தமிழ் – முதல் தாள்

## (செய்யுளும், இலக்கணமும்)

# Language – Part I – TAMIL – Paper I

நேரம் : 3 மணி ] [ மதிப்பெண்கள் : 100

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்து கொள்ளவும். அச்சுபதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** (i) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) VI-ல் உள்ள வினாக்களுக்கு மட்டும் விடைகள் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் **எவையேனும் நான்கனுக்கு மட்டும்** ஒவ்வொன்றிற்கும் **ஐந்து வரிகளில்** விடை எழுதுக. 4x2=8

1. புறநானூற்றால் அறியப்படும் செய்திகள் யாவை?

2. வன்மையுள் வன்மை எது?

3. வீரமா முனிவரின் இலக்கிய பங்களிப்பு எத்தகையது?

4. முக்கூடலில் கூடும் ஆறுகள் யாவை?

5. குழந்தை தொழிலாளர்கள் ஏன் பம்பரம் சுற்றி விளையாட முடியவில்லை?

6. சுந்தரர் தம்பிரான் தோழர் என்றழைக்கப்படக் காரணம் யாது?

[ திருப்புக

http://www.tamilnaduboard.com

http://www.tamilnaduboard.com



II. பின்வரும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு மட்டும்** ஒவ்வொன்றிற்கும் **பத்து வரிகளில்** விடை எழுதுக. 3x4=12

7. நாமக்கல் கவிஞர் இந்தியர் அனைவரும் எவ்வெண்ணத்தைக் கைக்கொள்ளல் வேண்டும் என்று கூறுகிறார்? ஏன்?

8. வினை மேற் சென்ற தலைவனிடம் தூது வந்த பாணன் தெரிவித்த செய்திகளை அகநானூறு வழி விளக்குக.

9. பிறர் கூறும் இன்னாச் சொல்லைப் பொறுப்பவர் எத்தகையவர்?

10. "ஈ தொன்று" என கண்ணகி கூறுவனவற்றை விளக்குக.

11. அனுமன் செய்ததும் இராமன் உணர்ந்ததும் யாவை?

III. பின்வரும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு மட்டும்** ஒவ்வொன்றிற்கும் **பத்து வரிகளில்** விடை எழுதுக. 3x4=12

12. தலைவி மேகத்திடம் மொழிந்த தூது மொழிகளாகக் குமரகுருபரர் கூறுவன யாவை?

13. பெருமாள் உறை திருவேங்கடப்பதி குறித்துப் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் கூறுவன யாவை?

14. சுவடிச் சாலையில் இருக்க வேண்டிய நூல்கள் யாவை?

15. கவிஞர் சுரதா எவ்வெவற்றைச் சிக்கனம் என பட்டியலிடுகிறார்?

16. அறிவர்க்கும் அறிவனாகிய அருகதேவனை நீலகேசி வழிபட்டமை எவ்வாறு?

http://www.tamilnaduboard.com

http://www.tamilnaduboard.com



IV. பின்வரும் வினாக்களுள் **எதேனும் ஒன்றனுக்கு மட்டும் இருபது வரிகளில்** விடை எழுதுக. **1x8=8**

17. "செய்ந்நன்றியறிதல்" பற்றி வள்ளுவர் கூறியுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

18. கண்ணகியின் சூளுரையும் நகர மாந்தர் மயங்கிக் கூறியனவும் யாவை?

19. மூலையில் கிடக்கும் வாலிபனிடம் தாராபாரதி கூறும் அறிவுரைகளைத் தொகுத்து எழுதுக.

V. பின்வரும் செய்யுளடிகளின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. **4x1=4**

20. "வெஞ்சின விறல்வேற் காளையொ
டஞ்சி லோதியை வரக்கரைந் தீமே"
(அ) இச்செய்யுளடிகள் இடம் பெற்ற நூல் எது?
(ஆ) இச்செய்யுளடிகளைப் பாடிய புலவர் யார்?
(இ) இது யார் யாரிடம் கூறியது?
(ஈ) 'அஞ்சிலோதி' - பொருள் கூறுக.

**அல்லது**

21. "அலங்குதண் சோலை புக்கேன் ; அவ்வழி அணங்கன் னாளைக்
கலங்கு தெண் டிரையிற் றாய கண்ணினீர்க் கடலிற் கண்டேன்".
(அ) இஃது யார் யாரிடம் கூறிய கூற்று?
(ஆ) இக் கூற்றமைந்த நூல் எது?
(இ) அணங்கன்னாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளவள் யார்?
(ஈ) சோலை புக்கேன் என்று கூறியது யார்?

VI. 22. "பல்சான்றீரே" எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடிபிறழாமல் எழுதி பாவகையையும் எழுதுக. **4+2=6**

23. 'சென்ற' எனத் தொடங்கும் குறட்பாவையும், **2+2=4**
'மகற்கு' என முடியும் குறட்பாவையும் எழுதுக.

[ திருப்புக

http://www.tamilnaduboard.com

http://www.tamilnaduboard.com



VII. 24. எவையேனும் **இரண்டு சொற்களுக்கு** உறுப்பிலக்கணம் தருக. 2x2=4

(அ) கொள்வர் (ஈ) அறைதல்

(ஆ) உணர்மின் (உ) காண்கிலர்

(இ) நோக்கி (ஊ) வாழிய

25. பின்வரும் கீழ்க் கோடிட்டவற்றுள் **எவையேனும் மூன்றனுக்கு** இலக்கணக் குறிப்பு எழுதுக. 3x2=6

(அ) <u>தழீஇ</u> (ஈ) <u>கடிமகள்</u>

(ஆ) <u>வல்விரைந்து</u> (உ) <u>புடைபுடை</u>

(இ) <u>வெஞ்சினம்</u> (ஊ) <u>திருந்துமொழி</u>

26. **எவையேனும் இரண்டு** தொடர்களைப் பிரித்து எழுதிப் புணர்ச்சி விதி தருக. 2x2=4

(அ) கடுந்திறல் (ஈ) பூங்கொடி

(ஆ) காற்சிலம்பு (உ) வரகரிசி

(இ) கண்ணுடையார் (ஊ) வறுமையுற்று

27. சான்று தந்து விளக்குக. 1x4=4

பொதுவியல் திணை

**அல்லது**

புணர்ந்து நீங்கிய தலைவனைத் தோழி வரைவு கடாயது

28. உதவி வரைத்தன் றுதவி உதவி 1x4=4

செயப்பட்டார் சால்பின் வரைத்து

-இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணியைச் சுட்டி விளக்குக.

**அல்லது**

தற்குறிப்பேற்ற அணி அல்லது உவமையணி விளக்குக.

http://www.tamilnaduboard.com

http://www.tamilnaduboard.com



VIII. பொருத்துக. 4x1=4

| நூல் | | ஆசிரியர் |
|---|---|---|
| 29. குயில்பாட்டு | - | அப்துல் ரகுமான் |
| 30. அழகின் சிரிப்பு | - | சுரதா |
| 31. துறைமுகம் | - | பாரதியார் |
| 32. பால்வீதி | - | தாராபாரதி |
| | - | பாரதிதாசன் |

IX. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 16x1=16

33. திருக்குறளில் அமைந்துள்ள இயல்கள்:

(அ) 4

(ஆ) 9

(இ) 10

34. 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்று பாடியவர்:

(அ) பாரதிதாசன்

(ஆ) பாரதியார்

(இ) நாமக்கல் கவிஞர்

35. 'உவமைக் கவிஞர்' என்று பாராட்டப்பட்டவர்:

(அ) சுப்பிரமணிய பாரதியார்

(ஆ) சுரதா

(இ) கண்ணதாசன்

36. பாஞ்சாலி சபதத்தில் உள்ள சருக்கங்களின் எண்ணிக்கை:

(அ) ஐந்து (ஆ) ஏழு (இ) ஒன்பது

[ திருப்புக

http://www.tamilnaduboard.com

http://www.tamilnaduboard.com



37. சுந்தரர் தேவாரம்:
(அ) முதலாம் திருமுறை
(ஆ) ஏழாம் திருமுறை
(இ) பன்னிரெண்டாம் திருமுறை

38. வீரமா முனிவரின் தாய்நாடு:
(அ) தமிழகம் (ஆ) பிரான்சு (இ) இத்தாலி

39. கம்பராமாயணத்தின் உட்பிரிவு:
(அ) படலம் (ஆ) இயல் (இ) காதை

40. நல்லாசிரியருக்கான டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது பெற்றவர்:
(அ) பாரதிதாசன் (ஆ) வாணிதாசன் (இ) தாரா பாரதி

41. "சேர தாண்டவம்" என்னும் நூலின் ஆசிரியர்:
(அ) சுப்புரத்தினதாசன்
(ஆ) அப்துல் ரகுமான்
(இ) பாரதிதாசன்

42. ஐங்குறு நூற்றின் அடி வரையறை:
(அ) 4 அடிகள் முதல் 8 அடிகள் வரை
(ஆ) 9 அடிகள் முதல் 12 அடிகள் வரை
(இ) 3 அடிகள் முதல் 6 அடிகள் வரை

43. நெடுந்தொகை என அழைக்கப்படும் நூல்:
(அ) அகநானூறு (ஆ) நற்றிணை (இ) புறநானூறு

44. கதிர் நாட்டின் அரசி:
(அ) நீலி (ஆ) அன்னம் (இ) கண்ணுக்கினியாள்

45. முல்லைத் திணையின் சிறு பொழுது:
(அ) முன்பனி (ஆ) வைகறை (இ) மாலை

http://www.tamilnaduboard.com

http://www.tamilnaduboard.com



46. வரி என்பது:
(அ) சந்தப்பாடல் (ஆ) இசைப்பாடல் (இ) கலிப்பாடல்

47. சீதாப்பிராட்டி தன்னை மீட்டுச்செல்ல வேண்டி விதித்த காலம்:
(அ) ஒரு திங்கள் (ஆ) ஓராண்டு (இ) ஒரு நாள்

48. 'தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை
தேறும் சிலப்பதிகாரம்' என்று பாராட்டியவர் :
(அ) பாரதிதாசன்
(அ) பாரதியார்
(இ) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக. 2+2=4

49. வினைத்திட்பம் என்ப தொருவன் ________
மற்றைய ________ பிற

50. மறவற்க மாசற்றார் ________ துறவற்க
துன்பத்துள் துப்பாயார் ________.

-o0o-

http://www.tamilnaduboard.com
Whatsapp @ 9300930012
Your old paper & get 10/-
पुराने पेपर्स भेजे और 10 रुपये पायें,
Paytm or Google Pay से

http://www.tamilnaduboard.com